முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்ட யாழ்பாண நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.03.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழும் அரங்கனே
அன்னதான சேவை ஆற்றிட
வரமாக வந்த தேசிகனே
வள்ளலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா எழுநான்குதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 28 ம் நாள், 12.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு திருநீலகண்டயாழ்பாண நாயனாரும்
3. யானுமே உலகநலமுற உரைப்பேன்
உள்ளம் தூய்மை அடையவே
ஞானபலமாக மனுகுலம் மாறவே
ஞானிகளை வணங்கித் தேற அருளும்
4. அருளும் அரங்கன் வழிகளை
அனைவரும் ஏற்றுத் தொடர
இருளெனும் சகல மாயையும்
இடரின்றி விலகிப் பாதுகாப்பான
5. காப்பான வழ்வாகத் தேறி
கலியுக மக்கள் எல்லாம்
ஒப்பு கொண்டு அரங்கனை குருவாக
உலகத்தில் ஏற்றுத் தொடர
6. தொடரும் துன்பம் விலகும்
தொடரும் சத்ரு ருண ரோக
இடர்கள் அனைத்தும் விலகி
இயம்பிடுவேன் மாற்றம் ஏற்றம்
7. ஏற்றம் தேட்டு தன வகை
எல்லாம் வளர்ச்சி ஆகும்
மாற்றம் ஞானமுடன் கூடிய
மகத்துவமாக வெற்றி காணும்
8. காணவே எங்கும் எதிலும்
கந்தவேலன் அனுகூலமாகி
ஞானமாக சகலதிலும் வெற்றி
நம்பிக்கைக்கு மேலாக நடந்தேறும்
9. தேறவே ஞானிகள் பூசை
தெய்வநெறி காட்டும் பூசை
அறமுடன் இவை பூசை முறைகள்
அனைவரும் செய்து தொடர

10. தொடரவே உலகம் எங்கிலும்
    தேசிகனின் அவதார பலம்
    தடையற ஆசியாக வரமாக
    தரணியெங்கும் பரவி ஆளுமை
11. ஆளுமைதனையே மாற்றிவிடும்
    ஆறுமுகன் தலைமை வரவே
    ஆளுமை ஞான ஆட்சி ஆகும்
    அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–